

கோவை கிழக்கு மண்டலம், வார்டு எண் 55க்குட்பட்ட எஸ்.ஐ.எச்.எஸ் குடியிருப்பு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாநில நிதிக் கழக (SFC) திட்டத்தின் கீழ் ரூ.90.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறை, வார்டு எண் 57க்குட்பட்ட நெசவாளர் குடியிருப்பு பகுதியில் (NULM) தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க நிதியின் கீழ் ரூ 2.67 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புற வீடற்ற ஆதரவற்றோர் தங்கும் விடுதியை கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் திறந்து வைத்தார். இதில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், தலைமை பொறியாளர் விஜயகுமார், கிழக்கு மண்டல தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், உதவி ஆணையர் ராம்குமார், மாமன்ற உறுப்பினர்கள் சாந்தாமணி, தர்மராஜ், பூபதி, உதவி செயற்பொறியாளர் கல்யாணசுந்தரம், மண்டல சுகாதார அலுவலர் ராஜேந்திரன் உள்பட கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மகளிர் உரிமைத் தொகையை

# முன்கூட்டியே வழங்கியதில் எந்தத் தவறும் இல்லை!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் எஸ்.ரகுபதி விளக்கம்!

**சென்னை, பிப். 24 - சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கலந்து கொண்டு பேசியபோது,**

**மகளிர் உரிமைத் தொகையை முன் கூட்டியே வழங்கியது குறித்து குறிப்பிட்டார்.**

**அப்போது குறுக்கிட்டு விளக்கம் அளித்த இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மகளிர் உரிமைத் தொகையை முன்கூட்டியே வழங்கியதில் எந்தத் தவறும் இல்லை என்று விளக்கம் அளித்தார்.**

அவர் குறிப்பிட்டதாவது:

Supreme courtல் அரசுகள் வழங்கும் இலவசத் திட்டங்கள் குறித்த வழக்கு ஒன்று தற்போது நிலுவையில் இருக்கிறது. அது மார்ச் மாதம் விசாரணைக்கு வரயிருக்கிறது.



தேர்தலுக்காக பரிசுப் பொருட்கள் கொடுக்கலாமா, கொடுக்கக்கூடாதா, அரசியல் கட்சிகள் கொடுக்கலாமா போன்றவையெல்லாம் அந்த caseனினுடைய issue வில் இருக்கிறது. (குறுக்கீடு)

எனவேதான், அப்படிப்பட்ட ஒரு வழக்கு வரும்போது அதிலேயும் ஒரு subject matter ஆக ஆகக்கூடிய பொருள் இருக்கிறது.

எனவே, இரண்டாயிரம் ரூபாய் கோடை காலத்திற்காக கொடுத்தது என்பதிலே எந்தத் தவறும் இல்லை. மகளிர் உரிமைத் தொகையைத் தொடர்ந்து மூன்று மாதங்களுக்குக் கொடுத்ததிலும் எந்தத் தவறும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் எஸ். ரகுபதி விளக்கம் அளித்தார்.

### 2006 - 2011 ஆம் ஆண்டு கழக அரசு உருவாக்கிய

# கிழக்குக் கடற்கரை சாலையை - உலக வங்கியே பாராட்டியது!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பெருமிதம்!

**சென்னை, பிப். 24 - சட்டப்பேரவையில் இடைக்கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி கலந்துகொண்டு பேசிய போது, கழக அரசில் சாலைகள் அமைப்பது பற்றிக் குறிப்பிட்டார்.**

**அப்போது குறுக்கிட்டு விளக்கம் அளித்த செய்தித் துறை அமைச்சர் மு.பி. சாமிநாதன், "2006 - 2011 கழக ஆட்சிக் காலத்தில் உருவாக்கப் பட்ட கிழக்குக் கடற்கரை சாலையை உலக வங்கியே பாராட்டியது!" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

அமைச்சர் மு. பெ. சாமிநாதன் இது குறித்து குறிப்பிட்டதாவது :

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும் போது சாலை அமைக்கிற பணியைப் பற்றிக் குறி ப்பிட்டார். அதற்கு நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதற்கான காரணம் அடிப்படை. 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை ஐயா கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலோடும், இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடும் அன்றைக்கு சாலை அமைக்கப்பட்டதை பத்திரிக்கைகளும் பாராட்டியது; மக்களும் பாராட்டினார்கள். கிழக்குக் கடற்கரை சாலை நாகபட்டினத்திலிருந்து தூத்துக்குடி



வரை 5 ஆயிரம் கோடி ரூபாய்க்கான உலக வங்கித் திட்டம். அது கிடப்பிலே கிடந்தது.

அன்றைக்கு அரசு அதனை செயல்படுத்தி, அதனை உலக வங்கியும் பாராட்டியிருக்கிறது. கேரள அரசின் முதலமைச்சர் அவர்கள் ஒரு முறை அன்றைக்கு தமிழ்நாட்டை பார்த்துவிட்டு வந்து, கேரளாவிலும் சாலை அமையுங்கள் என்று குறிப்பிட்ட கருத்தும் பத்திரிக்கைகளில் வெளி வந்திருக்கிறது. அந்த அடிப்படைக் கட்டமைப்புதான் அவருடைய ஆட்சிக்கான அந்த சூழ்நிலை உருவாகியது.

இவ்வாறு அமைச்சர் மு.பெ. சாமிநாதன் குறிப்பிட் டார்.

### இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான்

# பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மிகவும் குறைவு!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் கீதாஜீவன் ஆதாரங்களுடன் விளக்கம்!

சென்னை, பிப். 24- "இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மிகவும் குறைவு!" என்று, சட்டப் பேரவையில் அமைச்சர் பி.கீதாஜீவன் ஆதாரங்களுடன் விளக்கமளித்தார்.

விவாதத்தின் நடுவே அமைச்சர் குறுக்கிட்டு அளித்த விளக்கம் வருமாறு:

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மிகவும் குறைவு !

அதனுடைய புள்ளி விவரங்கள் என் கைவசம் இருக்கின்றன.

2023 ஆம் ஆண்டிற்கான தேசிய குற்ற ஆவண காப்பக அறிக்கை. அதிகப்படியான மக்கள்தொகை உள்ள மாவட்டங்களில் பெண்களுக்கு எதிரான குற்ற நிகழ்வு குறைவாக உள்ள முதல் 5 மாநிலங்களில், 4வது இடத்தில் தமிழகம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உதாரணமாக, மொத்த பாலியல் வன்கொடுமை வழக்குகளின் எண்ணிக்கை அகில இந்திய அளவில் 29,670. இதில் 55% நம்முடைய பா.ஜ.க. ஆட்சி செய்கிற 5 மாநிலங்கள், ராஜஸ்தான் 5,078, உத்திரப்பிரதேசம் 3,516, மகாராஷ்டிரா 2,930, மத்தியப் பிரதேசம் 2,979, ஹரியானா 1,872, தமிழ்நாட்டில் 365.

அதேபோல், கூட்டுப் பாலியல் வல்லுறவு வழக்குகளின் எண்ணிக்கை அகில இந்திய அளவில் மொத்தம் 1,753 அதில் 88% வெறும் 6 மாநிலங்களில் மட்டும் இருக்கின்றன.

ராஜஸ்தான் 867, உத்திரப்பிரதேசம் 244, மத்தியப் பிரதேசம் 150, ஹரியானா 131, மகாராஷ்டிரா 67 தமிழ்நாட்டில் வெறும் 3 வழக்குகள்தான்.

அதேபோலத்தான், மாற்றுத் திறனாளிகளுக்கு எதிரான வழக்குகள் தமிழ்நாட்டில் 10. ஆனால், அகில இந்திய அளவில் மொத்தம் 132. அதேபோல், வரதட்சணைக் கொடுமை வழக்கு அகில



இந்திய அளவில் 6,211. இவ்வாறு 73% வழக்குகள் இதே உத்திரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இருக்கின்றன.

தமிழ்நாட்டில் 11 வரதட்சணை இறப்புகள்தான் இருக்கின்றன.

அதேபோல், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதில் அகில இந்திய அளவில், பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்களில், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதில், தேசிய சராசரி 77.6, தமிழ்நாட்டில் 91 சதவிகிதம். குழந்தைகளுக்கு எதிரான குற்றம் என்று பார்த்தீர்களென்றால் தேசிய அளவில் 63.4 சதவிகிதம். ஆனால், தமிழ்நாட்டில் 93 சதவிகிதம்.

ஆகவே, இங்கு குற்ற நிகழ்வுகள் நடந்தவுடனேயே அவர்களுக்கு வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுகிறது. அரசே அந்த பாதிக்கப் பட்டோர் அனைவருக்கும் உதவி செய்து வழக்குகளையும் நடவடிக்கை எடுத்து நடத்துகிறது. அவர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்கிறது.

அதுமட்டுமல்லாமல், நம்முடைய காவல் துறை, சமூக நலத் துறை, கல்வித் துறைமூலம் விழிப்புணர்வு மட்டுமல்லாமல் நடவடிக்கையும் காவல் துறைமூலம் விரைந்து எடுக்கப்படுகிறது என்பதை நான் இங்கு உறுதியோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் பதில் அளித்தார்.

### அண்ணா செய்த 'தமிழ்நாடு' பெயர் மாற்றம் – கலைஞர் 'கல்லக்குடி' போராட்டத்தில் சிறையேகியது – முதல்வர் மு.க.ஸ்டாலின் 'மிசா' காலத்தில் கைது செய்யப்பட்டது – என

# அரசு ஆவணக் காப்பகத்தில் வரலாற்று நிகழ்வுகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் கோவி.செழியன் பெருமிதம்!

**சென்னை, பிப்.24- சட்டப்பேரவையில், உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், தமிழ்நாடு அரசின் பாரம்பரியமும் பழமையும் வாய்ந்த ஆவணக் காப்பகத்தில், வரலாற்று நிகழ்வுகள் பல காட்சிப்படுத்தப்பட்டுள்ளதை பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் இது குறித்து அமைச்சர் கோவி.செழியன் குறிப்பிட்டதாவது :-

கிட்டத்தட்ட 1907 ஆம் ஆண்டு சென்னை, எழும்பூர் இரயில்வே நிலையம் எதிரில் இருக்கக்கூடிய ஆவணக் காப்பகம் கட்டடம் கட்டப்பட்டது. 1720 ஆம் ஆண்டு முதலான ஆவணங்கள் பல கோடிக்கணக்கான ஆவணங்கள் அங்கு சேகரிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் முதன்மைவாய்ந்த, தொன்மைவாய்ந்த அதிக



ஆவணங்கள் உள்ள மாநிலம் எது என்றால் தமிழ்நாடு. அது எழும்பூர் இரயில்வே நிலையம் எதிரே உள்ள ஆவண காப்பகம்.

அந்தக் காப்பகத்தில் இன்றையதினம் நம்முடைய தாயுள்ளம் படைத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய பெருங்கருணையால் அந்த ஆவணங்கள் பாதுகாப்பதற்கு 10 கோடி ரூபாயும், அவைகளைப் பாதுகாத்து வைக்கின்ற இடத்தைச் சரி செய்ய, அதனைப் புனரமைக்க 20 கோடி ரூபாயும், ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவைகளில் இருக்கிற முக்கிய ஆவணங்கள் காட்சிப் படுத்தப்பட வேண்டுமென்ற சட்டமன்ற அறிவிப்புக்கு இணங்க சுமார் 20 கோடியே 20 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அந்தக் காட்சிப்படுத்துதல் மற்றும் கட்டடப் புதுப்பித்தலை துணை முதலமைச்சர் அவர்கள் இன்று திறந்து வைத்திருக்கிறார்கள்.

சபையில் நான் சொல்ல விரும்புவது, மிக முக்கிய ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு சென்னைப் பட்டினம் உருவானது எப்படி எனும் பத்திரமான அந்த ஆவணங்கள், தமிழ்நாடு பெயர்மாற்றம் - அண்ணா செய்த அந்த ஆவணம், கலைஞர் கல்லக்குடிப் போராட்டத்தில் மொழிக்காக தண்டனை பெற்ற அந்த ஆவணம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிசா காலத்தில் கைது செய்யப்பட்ட அந்த ஆவணம், திப்பு சுல்தான் காலத்தில் எப்படி உளவுப் பிரிவு பணியாற்றியது என்ற ஆவணம், வீரபாண்டிய கட்டபொம்மன் எப்படி தூக்கிலிடப்பட்டார், அந்தத் தண்டனைக்குரிய தீர்ப்பு என்ன என்பது போன்ற முக்கிய ஆவணங்கள் 40-க்கும் மேற்பட்ட ஆவணங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

சுமார் 120 வருடங்கள் பாரம்பரியமுடைய ஆவணக் காப்பகத்தில் மாணவர்கள், இளைஞர்கள் பயன் பெறக்கூடிய வகையில் கண்காட்சியினை துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியையும், அதை மாணவர்கள் கண்டுகளிக்க வேண்டுமென்ற அறிவிப்பையும் வெளியிட்டு அது முத்தாய்ப்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆங்கிலத்தில் கையெழுத்திட்ட அந்த நகலை ஆவணப்படுத்தி காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்ற அந்த மகிழ்வான செய்தியை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்தார்.



தமிழ்நாட்டிலுள்ள 1.31 கோடி இல்லத்தரசிகளுக்கு பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான உரிமைத் தொகை மற்றும் கோடைக்கால சிறப்புத் தொகுப்பு என மொத்தமாக ரூ.5000/ வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு நன்றி தெரிவித்து கோவை காந்திபுரம் பேருந்து நிலையத்தில் கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் செயலாளர் பொள்ளாச்சி உமாபதி முன்னிலையில் துணைச் செயலாளர் மீனா ஜெயக்குமார் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். இதில் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட தலைவர் துரை கதிரவன், மாவட்ட துணைச் செயலாளர் கல்பனா செந்தில், துணை அமைப்பாளர்கள் எஸ்.எம்.எஸ்.சுதாகரன், சீனிவாசன், பூங்குயில் பாபு, ராஜசேகர், அயலக அணி கோவை சாதிக், மகளிர் அணி தலைவர் தீபா, வட்ட கழக பொறுப்பாளர் ஜுலி, வாசுகி, சங்கீதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### போக்குவரத்துத் துறையில் ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்றவர்களின் குடும்பங்களுக்கு

# பணப்பலன்கள் வழங்கிட - முதல்வர் ரூ.2446 கோடி ஒதுக்கீடு!

## சட்டப்பேரவையில் – போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பெருமிதத்துடன் அறிவிப்பு!

**சென்னை, பிப். 24- போக்குவரத்துத் துறையில் ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்ற அல்லது பணிக்காலத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு பணப் பலன்கள் வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ரூபாய் 2,446 கோடியே 46 இலட்சத்து எண்பதாயிரம் வழங்கியுள்ளார்கள் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்கள்.**

சட்டப்பேரவையில் அவர் குறிப்பிட்டதாவது:

திராவிட மாடல் முதல்வர் அவர்களுக்கு போக்குவரத்துத் துறை சார்பாக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்வதற்கு இந்த வாய்ப்பை வேண்டுகிறேன்.

பணிக்காலத்திலே ஓய்வு பெற்றவர்கள், விருப்ப ஓய்வு பெற்றவர்கள், இறந்து போனவர்களுடைய குடும்பத்திற்கு உரிய காலத்தில் பணப்பலன்கள் வழங்கப்பட முடியாத சூழல் கடந்த கொரோனா காலத்திற்கு முன்பே ஏற்பட்டது. கடந்த ஆட்சிக்காலம் முதல் இருந்து வந்தது. அந்த நிலை தொடர்ந்து நீடித்து வந்தது. அப்படி பணப்பலன்களை வழங்குவதற்கு போக்குவரத்துத் துறைக்கு இருக்கின்ற நிதி நெருக்கடி காரணமாக அதை வழங்க முடியாத சூழல் இருந்த போது, அரசு சார்பாக முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஒவ்வொரு கட்டமாக வழங்கி வந்தார்கள். அதிலே இன்றைக்கு உச்சகட்டமாக ஆகஸ்ட் 2024 முதல் வருகின்ற மார்ச் 2026 வரை 6,867 ஓய்வு பெற்ற, விருப்ப ஓய்வு பெற்ற அல்லது பணிக்காலத்தில் இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கான பணப்பலன்களாக ரூபாய் 2,446 கோடியே 46 இலட்சத்து எண்பதாயிரத்தை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துத் துறை வரலாற்றிலேயே மிகப் பெரிய பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய செய்தியாக இந்த செய்தியை, இன்றைக்கு நான் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021–2022 ஆம் ஆண்டு 1,241 பணியாளர்களுக்கு 242 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். 2022–2023 ஆம் ஆண்டு 5,267 பணியாளர்களுக்கு 1,339 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். 2023–2024 ஆம் ஆண்டு 210 தொழிலாளர்களுக்கு 32 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். 2024–2025 ஆம் ஆண்டு 4,740 தொழிலாளர்களுக்கு 1,278 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள். இந்த 2025–2026 ஆம் ஆண்டிலே இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற 2,446 கோடியையும் சேர்த்தால் 4,485 கோடி ஒதுக்கி, மொத்தம் 24,100 தொழிலாளர்களினுடைய குடும்பங்களுக்கு 7,379 கோடியை ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துத் துறை, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் காலத்தில் துவக்கப்பட்டு ஒரு மிகப்பெரிய துறையாக நிர்மாணிக்கப்பட்ட பிறகு, இடைப்பட்ட காலங்களில் ஒவ்வொரு முறை தொய்வுறும்போதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைகின்றபோதெல்லாம், அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்விலே மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினால்



தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதிலே, இந்த முறை ஆட்சி அமைந்திருக்கின்ற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு மீண்டும் ஒரு புத்துயிர் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, தொழிலாளர்களுடைய நீண்டநாள் கோரிக்கைகள் இரண்டுகட்ட பேச்சுவார்த்தையிலே நிறைவேற்றப்பட்டி ருக்கிறது. ஒரு ஆட்சிக்காலத்தில் ஒரு ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையை நிகழ்த்துவதே சிரமமாக இருக்கும். ஆனால், திராவிட மாடல் முதல்வருடைய ஐந்தாண்டு ஆட்சிக்காலத்தில் 14–வது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை, 15–வது ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை என இரண்டு பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொடுத்திருந்த Pay Matrix முறை என்ற சம்பள விகிதம் கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் சீர்குலைக்கப்பட்ட தை மீண்டும் 14–வது ஊதிய ஒப்பந்தத்தில் முதலமைச்சர் அவர்கள் சீரமைத்துக் கொடு த்து Pay Matrix முறையிலே மீண்டும் சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். ஐந்து சதவிகித சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அடுத்த பேச்சுவார்த்தையில் ஆறு சதவிகித சம்பள உயர்வு வழங்கப்பட்டது. முதலமைச்சர் அவர்களுடைய நடவடிக்கையினால்தான் போக்குவரத்துத் துறை தொழிலாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த ஆட்சிக்கு நம்பிக்கையாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் துறை இன்றைக்கு சிறப்பாகச் செயல்படுவதற்கு அவர்கள் உறுதுணையாக இருக்கிறார்கள். அதற்கு மகுடம் சூட்டுவது போல, இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள், வெளியிட்டிருக்கின்ற இந்த அரசாணையில் 2,446 கோடி ரூபாயை ஒதுக்கியதற்கு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொகை ஒதுக்குவதற்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நிதி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், மரியாதைக்குரிய முதல்வர் அவர்களின் செயலாளர் மரியாதைக்குரிய R. உமாநாத், IAS., அவர்களுக்கும், ஜி.லட்சுமிபதி IAS., அவர்களுக்கும், நம்முடைய நிதித் துறையின் செயலாளர் மரியாதைக்குரிய த.உதயச்சந்திரன் IAS., அவர்களுக்கும் போக்குவரத்துத் துறையின் தொழிலாளர்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைப் பதிவு செய்து கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் குறிப்பிட்டார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கே.பி. கணேசன்

### பிப்ரவரி 24 (2017)



**கழகம் தொடங்கிய காலம் முதல் 1997ஆம் ஆண்டு வரை தொடர்ந்து வீரபாண்டி ஒன்றியக் கழகச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – தலைமை செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.**

**எஸ்.பாப்பாரப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர், வீரபாண்டி ஒன்றிய துணைப் பெருந்தலைவர், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர், சேலம் மாவட்ட நிலவள வங்கி துணை தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**நெருக்கடிகால மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.